12.10.2021

பொருள் எண்.1

திருச்செங்கோடு நகராட்சியில் தற்போதுள்ள மொத்த தெருவிளக்குகள் 5198 (LED விளக்குகள் –1542 LED அல்லாத இதர விளக்குகள் 3656) இயக்கி பராமரிக்க தற்போது நகராட்சியில் உள்ள 4 மின்கம்பியாளர்கள் மற்றும் 2 மின்கம்பி உதவியாளர் போக மீதமுள்ள இடைவெளிக்கு கீழ்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

| வ. எண் | பணியாளரின் பதவி | மொத்தமுள்ள 5198 (LED விளக்குகள் –1542 LED அல்லாத இதர விளக்குகள் 3656) தெருவிளக்குகளுக்கு தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை | தற்போதுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை | இடைவெளி |
|---|---|---|---|---|
| 1 | மின்கம்பியாளர் | 8 | 4 | 4 |
| 2 | மின் கம்பி உதவியாளர் | 8 | 2 | 6 |
| 3 | ஓட்டுநர் | 1 | – | 1 |

திருச்செங்கோடு நகராட்சியில் உள்ள அனைத்து தெருவிளக்குகளையும் இயக்கி பராமரித்தல் பணிக்கு நகராட்சி நிரந்தர பணியாளர்கள் போக மீதமுள்ள இடைவெளிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021–இல் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி, தேவைப்படும் பணியாளர்களை புற ஆதார முறையில் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்திகொள்ள மதிப்பீடு ஓர் ஆண்டிற்கு ரூ.35.30 இலட்சத்திற்கு (ஒப்பந்தப்புள்ளி விலை ரூ.24.76 இலட்சம்) தயார் செய்யப்பட்டு உரிய நிர்வாக அனுமதி வழங்க வேண்டி கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.6629/2021/இ1)

பொருள் எண்.2

திருச்செங்கோடு நகராட்சியில் உள்ள பொதுமக்களுக்கு தேவைப்படும் குடிநீரை வழங்குவதற்கு தற்போதுள்ள 1 தலைமை நீரேற்று நிலையம் மற்றும் சுத்திகரிப்பு நிலையம், 2 நீர் உந்து நிலையம், 18கி.மீ தூர பிரதான குடிநீர் குழாய், 148.143 கி.மீ தூர குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் 19 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் ஆகியவற்றை இயக்கி பராமரிக்க நகராட்சியில் போதுமான பணியார்கள் இல்லை.

எனவே திருச்செங்கோடு நகராட்சியில் உள்ள பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சீரான முறையில் வழங்க, குடிநீர் இயக்கம் மற்றும் பராமரித்தல் பணிக்கு நகராட்சி நிரந்தர பணியாளர்கள் போக மீதமுள்ள இடைவெளிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021–இல் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி, தேவைப்படும் பணியாளர்களை புற ஆதார முறையில் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்தி கொள்ள மதிப்பீடு ஓர் ஆண்டிற்கு ரூ.171.51 இலட்சத்திற்கு (ஒப்பந்தப்புள்ளி விலை ரூ.120.35 இலட்சம்) தயார் செய்யப்பட்டு உரிய நிர்வாக அனுமதி வழங்க வேண்டி கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.6629/2021/இ1)

பொருள் எண்.3

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படி திருச்செங்கோடு நகராட்சி பகுதிகளில் புற ஆதார முறையில் சுகாதார பணிகள் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள தேவையான பணியாளர்கள் விவர கருத்துரு தயார் செய்யப்பட்டு அதன்படி தேவைப்படும் தூய்மைப் பணியாளர்கள் – 220 நபர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் – 10 நபர்கள், ஓட்டுநர்கள் – 72 நபர்கள், மின்னாளர் நிலை II – 1 நபர், பூங்கா பராமரிப்பாளர் – 35 நபர்கள் ஆக மொத்தம் 338 பணியாளர்களுக்கு ஓர் ஆண்டிற்கு மதிப்பீடு தொகை ரூ.57738240/– மற்றும் படிகள் ரூ.245676/– ஆக மொத்த மதிப்பீடு ரூ.82300000/– தயார் செய்யப்பட்டு உரிய நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொதுநிதி மற்றும் SUC நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.6545/2021/எச்1)